**வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனி - 2022**

---

**1. நிதிக்கூற்றுகள்**

**1.1 அபிப்பிராயம்**

வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனியின் ('கம்பனி') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெமபர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பில் நிட்சயமற்ற பொருண்மை**

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல், நிதிக்கூற்றுக்களின் 2.1 ஆம் குறிப்பு தொடர்பாக நான் கவனத்தை ஈர்க்கின்றேன்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகளின்மை

| விடயம் | தொகை (ரூபா) | கிடைக்கப் பெறாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) பொருளிருப்பு | 11.6 மில்லியன் | பொருளிப்பு மெய்மையாய்வு அறிக்கை | 2022.12.31 இல் உள்ளவாறு ரூபா 11.6 மில்லியனாக இருந்ததுடன் பொருளிருப்பு விடயங்களின் பட்டியல் தேவையாக கணக்காய்வு நொக்கத்திற்காக உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த பொருளிப்பு விடயங்ளில் மூலப் பொருட்கள் மற்றும் பூர்த்தியான கம்பங்களை (தரமற்றவை) கொண்டுள்ளதுடன் அவை பண்டாரவளை மற்றும் பிலியந்தலை களஞ்சிய வளவில் உள்ளன. LPL ஆனது பதவியணியை கொண்டிருக்காததுடன் ஏனையோர் பொருட்களை மெய்மையாய்வு செய்ய | 1) வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>2) தாபனத்தின் வளங்கள் ஆகக் கூடிய நலன்களை பெறுவதற்கு பயன்படுத்த வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முடியாதவர்கள் ஆனால் என்னசெய்வது நாங்கள் LECO உத்தியோகத்தரின் ஆதரவுடன் குறைந்தது எதிர்காலத்தில் பொருட்களை மெய்மையாய்வு செய்ய படிமுறைகள் எடுப்போம். | |
| (ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 5.2 மில்லியன் | நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கை | 2022.12.31 இல் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5.2 மில்லியனாக இருந்ததுடன் கணக்காய்விற்காக எக்சல் படிவத்தில் நிலையான சொத்து பதிவேடு ஏற்கனவே உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சில்லறை கருவிகள், பொறி மற்றும் இயந்திரம் போன்ற அந்த சொத்துக்கள் பண்டாரகம வளவில் களஞ்சியப் படுத்தப்பட்டது. தற்போது மாதிரிகள் திருத்தப்பட்டதுடன் வஸ்கடவ களஞ்சியத்தில் தேக்கப்பட்டது. வரையறுத்த லெகோ (தனியார்) செயற்திட்டங்கள் (LPL என பின்னர் அழைக்கப்பட்டது) பதவியணியை கொண்டிருக் காததுடன் ஏனையோர் பொருட்களை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. நாங்கள் லெகோவின் வேறு உத்தியோகத்தருடன் மற்றும் வேண்டப் பட்டவற்றினை மேவுவதற்கு முன்னிக்கப்பட்து. | வருடாந்த கணிப்பீட்டுச் சபை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் ரூபா 9.3 மில்லியனாக இருந்தது. கம்பனியானது இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனி என்பவற்றிடமிருந்து பெறவேண்டியவையாக முறையே | நாங்கள் நீண்ட காலத்தின் பீன்னர் பெறவேண்டியவைகளை இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடுவதற்கு முயற்சி எடுத்திருந்ததுடன் நாங்கள் 2022 ஆகஸ்ட் மாதத்தில் இரத்தினபுரி உடன் கலந்துரையாடலொன்றை நடாத்தியிருந்தோம். இதன் விளைவால் இலங்கை மின்சார சபை நிர்மாணிக்கப்பட்ட | நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 1.5 மில்லியன் மற்றும் ரூபா 0.3 மில்லியன் இனங்கண்டிருந்த போதிலுத் அந்த பதிவுகள் அவர்களுடைய நிதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டியவையாக பதியப்பட்டிருக்கவில்லை. | வழிகளை அளவிடுவதற்கு உடன்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 7.5 மில்லியன் தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 0.3 மில்லியன் தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 7.8 மில்லியன் தொகையான முன்னேற்றத்தை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்காக கழிவுபொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திடமிருந்து வருமானம் அனுமதிக்கப்பட்டமையே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கம்பனியின் நடைமுறை விகிதம் 0.89 முதல் 1.25 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மின்சார கம்பங்கள் உற்பத்தி செய்வதே வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனியின் பிரதான வியாபாரமென்றாக இருந்தது. 2013 இலிருந்து கம்பனியானது தரப் பரிசோதனையில் தவறியமையால் மின் கம்பங்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அதன்பின்னர் கம்பனியானது மீளாய்வாண்டு இறுதிவரை கம்பங்களின் தரத்தை முன்னேற்றுவதன் மூலம் மின்கம்பங்களின் உற்பத்தியை மீள தொடங்கவோ அல்லது ஏதாவது வேறு பொருத்தமான வியாபாரங்களை இனங் காணப்பட்டோ இருக்கவில்லை. மேலும் கம்பனியானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18.5 மில்லியன் திரண்ட நட்டங்களை அடைந்திருந்தது. | முகாமைத்துவம் லெகோவிற்கு வெளியிலிருந்து புதிய செயற்திட்டங்களை கைறேற்பதற்கு தீர்மானித்ததுடன் நாங்கள் 2024 இல் இரண்டு பிரதான செயற்திட்டங்களை இனங்கண்டிருந்தது. ஆகவே, நாங்கள் 2024 ஆம் ஆண்டிற்காக பாதீடு மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருந்தது. | தரத்தை முன்னேற்றுவதன் மூலம் கம்பங்களின் உற்பத்தியை மீள தொடங்குவதற்கோ அல்லது ஏதாவது பொருத்தமான வியாபாரத்தை இனங்காண்பதற்கோ நடவடிக்கை எடுக்க வெண்டும். |

### 3.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்படுத்தாமை அல்லது குறைபயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5.2 மில்லியனாக இருந்ததுடன் அந்த சகல சொத்துக்களும் 2013 இலிருந்து பயனற்றிருந்தது. | சில்லறை கருவிகள், பொறி மற்றும் இயந்திரம் போன்ற அந்த சொத்துக்கள் பண்டாரகம வளவில் களஞ்சியப் படுத்தப்பட்டது. தற்போது மாதிரிகள் திருத்தப் பட்டதுடன் வஸ்கடவ களஞ்சியத்தில் சேகரிக்கப்பட்டது. | தாபனத்தின் வளங்கள் ஆகக் கூடிய நலன்களை பெறுவதற்கு பயன்படுத்த வேண்டும். |